பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 17 | வெள்ளிக்கிழமை | 01.03.2024 | அதிர்வு 213

## நீர்த்தேக்கத்தில் இருந்து இளைஞரின் சடலம் மீட்பு



(செ தி.பெருமாள்)

தலவாக்கலை, மேல்கொத்மலை 06

# இந்திய மத்திய அரசு ஜனவரி 22 இல் அனுமதியளித்த பிறகும் சாந்தனை ஏன் இலங்கைக்கு அனுப்பவில்லை?

## தமிழக அரசிடம் உயர்நீதிமன்றம் கேள்வி



(எம்.கே. ஷாகுல் ஹமீது)

காலமான சாந்தன் தொடர்ந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிபதிகள் சுரேஷ் குமார், குமரேஷ் பாபு இருவரும், சாந்தனை இலங்கை அனுப்ப எப்போது அனுமதி வழங்கப்பட்டது என்று இந்திய மத்திய அரசிடம் கேள்வி எழுப்பினர். கடந்த ஜனவரி 22ஆம் திகதி சாந்தன் இலங்கை செல்ல அனுமதியளிக்கப்பட்டது என்று மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதைக் கேட்ட நீதிபதிகள், “மத்திய அரசு ஜனவரி 22ஆம் திகதி அனுமதியளித்த பிறகும் சாந்தனை ஏன் இலங்கைக்கு அனுப்பவில்லை” என்று தமிழக அரசிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த தமிழக 06

# சாந்தனின் பூதவுடல் இன்று இலங்கைக்கு

## யாழில் இறுதி அஞ்சலி நிகழ்வு



(ந.லோகதயாளன்)

சென்னையில் காலமான சாந்தனின் பூதவுடல் இன்று அங்கிருந்து முற்பகல் 9.45 மணிக்குக் கொழும்பு வரும் விமானத்தில் எடுத்து வரப்படவுள்ளது. 07

## வவுனியாவில் ரயில் மோதி பெண்ணொருவர் உயிரிழப்பு



(கே.வசந்தன்)

வவுனியா, புளியங்குளம், புதூர் பகுதியில் ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட பெண் மீது ரயில் மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்ற ரயில், புதூர் பகுதியில் உள்ள கடவையைக் கடக்க முற்பட்ட 06



தமிழ் அரசியல் தொடர்பில் நான் அவ்வப்போது குறிப்பிட்டு வரும் பல ஹேஸ்யங்கள் பின்னாளில் பலித்து வருகின்றமை கண்கூடு. இப்போது தமிழரசுக் கட்சி விடயத்திலும் கூட அப்படியுண்டு.

கட்சி விவகாரம் கோர்ட், வழக்கு என்று போக முன்னரே ‘கட்சிப் பொறுப்பு மீண்டும் மாவையின் மடியில் தேடி வந்து விழும்’ என்ற சாரப்படக் கோடிகாட்டி இருந்தேன். அதுவே நடந்திருக்கின்றது. 06



# வடக்கு சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளுடன் ஆளுநர் பேச்சு

வடக்கு மாகாணத்திலுள்ள சனசமூக நிலையப் பிரதிநிதிகளை ஆளுநர் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அச்சுவேலி சென்திரேசா மகளிர் கல்லூரியில் இந்தச் சந்திப்பு முன்னெடுக்கப்பட்டது.

சமூக நிலையிலிருந்து தற்போது மக்கள் மாறிவரும் போக்கு காணப்படுகிறது, எனவே மக்களை மீண்டும் சமூகமயமாக்கும் நோக்கத்தில் இந்தச் சந்திப்பு முன்னெடுக்கப்பட்டு வருகிறது எனக் கூறப்பட்டது.

மக்கள் தமக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தாமே இனங்கண்டு, ஏற்றுக் கொண்டு, அவற்றுக்குச் சமூகமாக இணைந்து தீர்வு காணும் வகையில் செயற்படுவதற்காக இத்தகைய கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ் தெரிவித்தார்.

மேலும் மக்கள் தற்போது பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இருப்பினும் சில பிரச்சினைகளுக்கு தாமே தீர்வினை பெற்றுக் கொள்ளும் வகையில் முன்வந்துள்ளனர். அத்துடன் வழி தவறிப் போகின்ற இளைஞர்களை அதிலிருந்து மீட்டு நல்வழிப்படுத்துவதும் சமூகத்தின் பொறுப்பு என்றும், அது தொடர்பிலும் மக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் இதன்போது பொதுமக்களிடம் அவர் கேட்டுக் கொண்டார்.

பொதுமக்கள் அரச ஊழியர்களைத் தேடிச் செல்லும் நிலையில, அரச ஊழியர்களே பொது மக்களைத் தேடி வரும் வகையிலான வடக்கு மாகாண ஆளுநரின் செயற்பாடு வரவேற்கத்தக்கது என இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

ஆளுநர் ஒருவர் கிராமத்திற்கு வருகைதந்து மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலே சிலவற்றிற்கு உடனடி தீர்வுகளை, வழங்கியும் ஏனையவை தொடர்பிலே கரிசனை செலுத்துவதும், முதல் தடவையாக இடம் பெறுகின்றன எனவும் இதற்கு பொதுமக்களாகிய தாமும் பூரண ஒத்துழைப்பு வழங்குகிறார்கள் எனவும் அவர்க குறிப்பிட்டனர்.

அத்துடன் நேற்றைய தினம் கிராம மக்களால் 15 வகையான பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன அவற்றுள் சிலவற்றுக்கு தீர்வுகளும் ஆளுநரால் வழங்கப்பட்டன. ஆளுநரின் குறித்த சேவை தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் கேட்டுக் கொண்டனர்.










# சுமந்திரனின் தாயாரின் பூதவுடலுக்கு அரசியல் பிரமுகர்கள் நேற்றும் அஞ்சலி

கொழும்பில் காலமான, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் தாயார் புஷ்பராணி மதியாபரணின் பூதவுடலுக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் பலர் நேற்று அஞ்சலி செலுத்திய போது...

(மேலும் படங்கள் 11, 12ஆம் பக்கங்களில்...)












# ‘அஸ்வெசும’ பெறத் தகுதியுடைய அனைவருக்கும் துரித நிவாரணம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி

“பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள இந்த நாட்டு மக்களை வாழ வைப்பதில் “அஸ்வெசும“ மற்றும் “உறுமய” வேலைத் திட்டங்கள் பெரும் பங்காற்றுகின்றன. நிவாரணம் கிடைக்க வேண்டிய அனைவருக்கும் துரிதமாக நிவாரணம் வழங்கப்படும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாத்தளை, வில்கமுவ பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற “அஸ்வெசும” வேலைத் திட்டத்தின் அமுலாக்கம் தொடர்பில் ஆராயும் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வில்கமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம சேவை உத்தியோகத் தர்களுடன் சிநேகபூர்வ சந்திப்பொன்றை நடத்தினார். அவர்களது தொழில்சார் பிரச்சினைகள் குறித்தும் கலந்து







ரையாடினார். “அஸ்வெசும“ மற்றும் “உறுமய” வேலைத் திட்டங்களுக்கு அவர்கள் வழங்கும் ஆதரவிற்கும் ஜனாதி பதி நன்றி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி உரையாற்றுகையில் –

“கடந்த ஆண்டு முதல் அஸ்வெசும திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்தோம். இத்திட்டம் எவ்வாறு செயற்படுத் தப்படுகிறது என்பதை அறிய இன்று வில்கமுவவிற்கு வந்தேன். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, நாடு வங்குரோத்தடைந்த தருணத்தில்தான் நான் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றேன். அப்போது பொருளாதார நெருக்கடி யில் இருந்து நாட்டைக் காப்பாற்ற எந்தத் தலைவரும் முன்வர வில்லை. இத்தகைய வங்குரோத்துச் சூழலில், மக்கள் தங்கள் தொழில்களை இழந்து, பல நெருக்கடிகளை எதிர்கொண் டனர். எனவே, நாட்டு மக்களை வாழ வைக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். அதன்படி நாட்டை பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தோம். அதன்பிறகு, மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும் வகையில், “அஸ் வெசும“ திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்க ஏற்பாடு செய்தோம். அதன்படி அஸ்வெசும மூலம் சமுர்த்தித் திட்டத்தை விட மூன்று மடங்கு உதவிகளை மக்களுக்கு வழங்க முடிந்தது.

இதன்படி, “அஸ்வெசும” நிவாரணம் தேவைப்படும் அனைவரையும் கண்டறிந்து, அவர்களுக்கு உதவிகளை வழங்குவதே எமது நோக்கமாகும். கலந்துரையாடல் மூலம் பிரச்சினைகளைக் கண்டறிந்து செயற்படுவதன் மூலம் இந்தத் திட்டம் வெற்றியளித்துள்ளது.

நம் நாட்டில் சுமார் 16 லட்சம் சமுர்த்திப் பயனாளிகள் இருந்த னர். ஆனால் நிவாரணப் பயனாளிகளின் எண்ணிக்கையை 24 லட்சமாக உயர்த்த எதிர்பார்க்கிறோம். மேலும், அரச ஊழியர் களின் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஏப்ரல் மாதம் முதல் அவர்களுக்கு 10,000 ரூபா வழங்கப்படும். 2015 ஆம் ஆண்டு நான் பிரதமராக பதவி வகித்த போது அரச ஊழியர்களின் சம்பளத்தை பத்தா யிரம் ரூபாவினால் அதிகரிக்க நடவடிக்கை எடுத்தேன். அடுத்த சம்பள உயர்வை பத்து வருடங்களில் வழங்க திட்டமிடப் பட்டிருந்தாலும் பொருளாதார நெருக்கடி காரணமாக 2024 இல் அதனை வழங்க முடிவு செய்தோம்.

மேலும் நாங்கள் ‘உறுமய’ திட்டத்தை நடைமுறைப்படுத்தி யுள்ளோம். 1935 ஆம் ஆண்டு முதல் காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் காணி உரித்து பெற்ற அனைவருக்கும் ‘உறுமய’ திட்டத்தின் கீழ் முழுமையான காணி உரிமை யைப் பெறுவர். சட்டப்பூர்வ உரிமை கிடைப்பதால், மக்கள் நீண்டகாலமாக சந்தித்து வந்த பிரச்சினை தீரும். உறுமய திட்டத்தின் கீழ் 20 லட்சம் பேருக்கு நிரந்தர காணி உறுதி கள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் பத்து லட்சம் காணி உறுதிகள் வழங்கப்படும். இந்த அனைத்து வேலைத் திட்டங்களின் கீழும் மக்களுக்குப் பாதுகாப்பான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும்.

“அஸ்வெசும“ மற்றும் “உறுமய” வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில், பிரதேச செயலகங்களுக்கு அதிகளவான பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும். இந்த திட்டத்தின் மூலம் நாட்டின் பொருளாதா ரத்தை மாற்றியமைக்க வேண்டும். இப்போது நாட்டின் பொரு ளாதாரம் சாதகமான வளர்ச்சியைக் காட்டுகிறது.



எனவே, இந்த மாகாணத்தில் வருமான வழிகளை அதிக ரிப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப் படுகிறது. குறிப்பாக சுற்றுலாப் பிரதேசமாக இந்த மாகா ணத்தை அபிவிருத்தி செய்ய முடியும். நவீன விவசாயம் மற்றும் ஏற்றுமதிக்கான பலசரக்குப் பொருள் கைத்தொழிலை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. கொக்கோ மற்றும் கோப்பித் தோட்ட அபிவிருத்திக்கு புதிய முதலீட்டாளர்களுடன் புதிய தோட்டங்களை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்ே- கற்ப மாத்தளை மாவட்ட மக்களின் வாழ்வை மேம்படுத்த எதிர்பார்க்கிறோம்.” – என்றார்.





# வவுனியா - மகாறம்பைக்குளம் வீதி புனரமைப்பு பணி நேற்று ஆரம்பம்

**(கே.வசந்தன்)**

வவுனியா – மகாறம்பைக்குளம், காளிகோவில் வீதி புனரமைக்கும் பணி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இவ்வாண்டிற்க்கான 1500 கிலோ மீற்றர் வீதி புனரமைப்பு திட்டத்தின் கீழ் இந்த வீதி காபெற் வீதியாக புனரமைக்கப்படவுள்ளது.

அந்தவகையில் 1180 மீற்றர் நீளமுள்ள இவ்வீதியின் புனரமைப்பிற்காக 27 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு, புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்தார். அவருடன் அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.












## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதனால் நேற்று வழக்குக்குப் பின்னர் வெளியே காட்டாமல் மகிழ்வின் உச்சத்தில் மாவையர் இருக்கின்றார் எனத் தகவல். அவருடன் வெளிநாட்டிலிருந்து கதைத்த ஓர் அன்பர் மூலம் கசிந்த தகவல் இது.

"இதைத்தானே நேரத்துடன் சொன்னேன். கேட்டீர்களா? கொஞ்ச நாளைக்கு நான் பார்க்கிறேன் என்றேன். அவசரப்பட்டீர்கள். இனி நான்தான் இன்னும் கொஞ்ச நாளைக்குப் பார்க்க வேண்டும்" – என்று ஏதோ தன்னை மீறிக் கட்சிப் பொறுப்புத் தன் மீது விழுந்த கவலையில் பேசுவார் போல சந்தோஷத்தின் உச்சியில் அவர்.

ஆனால், அவர் அப்படி மகிழ்வதற்கு இடம் இருக்காத நிலைமை வந்தாலும் வரலாம். விடயங்கள் போகின்ற போக்கில் தேர்தல் வரும் சமயம் 'வீடு' முடக்கப்பட்டு கிடக்கும் நிலைமை வந்தாலும் வரும். அதை வாங்கித் தந்த பெருமை – வரலாற்றுப் பழி – மாவை தலைமீது வீழும்.

தேர்தல் சமயம் குத்துவிளக்கில் ஒண்ட வேண்டி வரலாம் என்று நேரத்துடன் – சில வாரங்களுக்கு முன்னர் – இந்த விடயத்தை நான் சூசகமாகக் கோடிக் காட்டி இருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

நேற்று நீதிமன்றத்தில் என்ன நடக்கும் என்பதை நேற்றுக் காலை இப்பத்தியில் கோடி காட்டியிருந்தேன்.

'திருகோணமலை வழக்கை வழக்காளி முன்நிபந்தனை ஏதுமின்றி இன்று விலக்கிக் கொள்வார் என எதிர்பார்க்கப் பட்டதாகக் கட்சியின் முக்கிய – மூத்த – வட்டாரங்கள் நேற்றிரவு கூறினாலும் எனக்கென்னவோ அதில் நம்பிக்கை இருக்கவில்லை.'– என்று நேற்று குறிப்பிட்டு இருந்தேன்.

'நீதிமன்றத்தில் போய் கட்சியின் யாப்புக்கு மாறாகத்தான் பல விடயங்கள் நடந்து விட்டன, ஆகவே ஆரம்பத்திலிருந்து எல்லாவற்றையும் நடத்துகின்றோம் என்று தவறை ஒப்புக் கொண்டு, விடயத்தை மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தொடங்குவோம் எனக் கட்சியின் உள்மட்ட கூட்டங்களில் சிறீதரன் திரும்பத் திரும்பக் கூறி வருகிறார் என அறிகிறேன்.

'இது மிக மிக ஆபத்தான நகர்வு என்பது அவருக்குப் புரியவில்லைப் போலும். இன்று வழக்குத் தவணை முடிய அதன் விளக்கத்தைத் தருகிறேன்.' – என்றும் நேற்றுத் தெரிவித்திருந்தேன். அதுதான் நடந்திருக்கின்றது.

கட்சியின் கூட்டங்கள், அமைப்புக்கள் எவையும் யாப்பு முறைப்படி நடக்க வில்லை என்று ஒரு பிரகடனத்தை (Declaration) வெளிப்படுத்துங்கள் என்பதும், வழக்காளியின் கோரிக்கைகளில் (Pray) ஒன்று.

இந்த விடயத்தில் உள்ள சட்ட நுணுக்கத்தை புரிந்து கொள்ளாமல், விவகாரத்தை அரசியலாகப் பார்க்கின்றனர் போலும் சிறீதரன் தரப்பினர்.

யாப்புக்கு மாறாகத்தான் – முரணாகத் தான் – விடயங்கள் எல்லாம் நடந்தன எனத் தாமாகவே நீதிமன்றுக்குப் போய் கட்சி நிர்வாகிகளான எதிராளிகளே ஒப்புதல் வழங்கினால் வழக்காளி கேட்ட மேற்படி பிரகடனம் என்ற கோரிக்கையை நீதிமன்றம் சங்கடமின்றி ஏற்று வழங்கும்.

கட்சியின் கடைசி வருடாந்த தேசிய மாநாடு நடந்து ஐந்து வருடங்கள் கடந்த நிலையில், அந்த விடயத்தையும், யாப் பின்படியே கட்சி இதுவரை செயற்படவில்லை என்ற நீதிமன்ற பிரகடனத்துடனும் எந்த வாக்காளனும் (குறிப்பாக தமிழரசின் மீது சீற்றம் கொண்டிருக்கும் பேரினவாதச் சிங்கள வாக்காளனும் கூட) தேர்தல் திணைக்களத்துக்குப் போனால் வீடு முடக்கப்படுவதற்கு நாள்கள் தேவைப்படாது. இதற்கு மேல் இந்த விடயத்தை நான் அக்கு வேறு ஆணிவேறாக சட்ட வாய்ப்புகளுடன் பேசுவது பொருத்தமற்றது. அதனால் சுருக்கிக் கொள்கிறேன்.

இப்போது வழக்கு ஏப்ரல் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தற்போது சிறீதரன் – மாவை தரப்பு எடுத்துள்ள தீர்மானங்களுக்கு அமைய தவறுகளை ஒப்புக்கொண்டு அதனை பதிந்து, வழக்கை முடிவுக்கு கொண்டு வர மே, ஜூன் ஆகலாம்.

அதாவது வழக்காடி, கேட்ட கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, மேற்படி பிரகடனம் உட்பட்ட விடயங்களை வழங்கி, நீதிமன்றம் விவகாரத்தை முடிவுறுத்த ஜூன் ஆகலாம்.

அந்த நீதிமன்ற பிரகடத்துடனும், ஏதேனும் ஒரு தரப்பு தேர்தல் ஆணையத்துக்குப் போய் முறையிட்டு வீட்டை முடக்கவும், பொதுத் தேர்தல் வரவும் நேரம் சரியாக இருக்கும்.

நான் குறிப்பிட்ட இந்த விடயங்களை மாவை – சிறீதரன் – தவராஜா அணியினர் என்னை அரசியல் எதிரியாகப் பார்த்துக் கருதாமல், நான் குறிப்பிட்ட விடயத்தில் உள்ள கருத்தைப் பார்த்து தீர்மானிப்பது நல்லது.

அதுவும் 2002 இல் இருந்து இப்போது வரை தமிழரசுக் கட்சியின் எல்லா வழக்குகளையும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் மூலம் முன்னெடுத்த மாவை தரப்பினர், இப்போது அவரைப் புறக்கணித்து முதல் சட்ட நகர்வை தொடங்கி இருக்கின்றனர். இந்தச் சூழலில் விடயங்களை சற்று எச்சரிக்கையாக மாவை தரப்பு பார்ப்பது நல்லது.

சம்பந்தப்பட்டோர் இது குறித்து என்னுடன் பேச விரும்பினால் எனக்குத் தெரிந்த விடயங்களை – மேல் விளக்கங்களை – பெற முடியும் என்று நினைக்கிறேன்.

வீடு முடக்கப்படுவது தமிழர் தேசியம் முழுமையாக முடங்கிப் போவதற்கான குறியீடாகி விடும். ஆகையினால் சம்பந்தப்பட்டோர் சட்ட விடயங்களை அரசியல் மட்டத்தில் தீர்க்காமல், சட்ட நிபுணத்துவத்துடன் அணுகுவது பொருத்தமானது.

## நீர்த்தேக்கத்தில் இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீர்த்தேக்கத்தில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மாலை மீட்க–ப்பட்டுள்ளது.

ஹொலிரூட், 18 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தசுன் லக்மால் (வயது 24) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தலாக்கலை பகுதியில் மரண வீடொன்றுக்கு நேற்றுமுன்தினம் இரவு இவர் சென்றுள்ளார் எனவும், அங்கு அவர் அதிகளவு மது அருந்தி இருப்பதைச் சிலர் கண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்துக்கு விரைந்த தலவாக்கலை பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டனர்.

நீதிவான் சம்பவ இடத்துக்கு வருகை தந்து மரண விசாரணை மேற்கொண்ட பின்னர், சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தலவாக்கலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதிக மதுபோதையில் இவர் வழுக்கி நீர்த்தேக்கத்தில் விழுந்தாரா அல்லது கொலை செய்யப்பட்டு நீர்த்தேக்கத்தில் வீசப்பட்டாரா என்ற கோணங்களிலும் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

## வவுனியாவில் ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முற்பட்ட பெண் மீது மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

இதையடுத்து உயிரிழந்த பெண்ணின் சடலம் மாங்குளம் ரயில் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு ஒப்படைக்கப்பட்டது. அங்கிருந்து மாங்குளம் வைத்தியசாலைக்குச் சடலம் அனுப்பி வைக்கப்பட்டது.

சம்பவத்தில் 45 தொடக்கம் 55 வயதுடைய பெண்ணே மரணமடைந்தவராவார்.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. புளியங்குளம் பொலிஸார் இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இந்திய மத்திய அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசின் வழக்கறிஞர், "ஜனவரி 24ஆம் திகதிக்கு முதலே சாந்தன் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவரால், நடக்கக் கூட முடியாமல் இருந்தது. அதனால் அவரை இலங்கைக்கு அனுப்ப முடியாமல் போய் விட்டது" – என்று விளக்கம் அளித்தார்.

இதையடுத்து, இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகள், "சாந்தனின் உடலை இலங்கைக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளை நியமித்து தேவையான நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும். இலங்கைத் தூதரக அனுமதி, இறப்புச் சான்று உள்ளிட்டவற்றைப் பெற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்றியது குறித்து எதிர்வரும் மார்ச் 4ஆம் திகதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்" – என்று உத்தரவிட்டனர்.

சாந்தனின் உடலை இலங்கைக்குக் கொண்டு செல்ல தூதரக அனுமதி ஆவணம் உள்ளிட்ட அனைத்து அனுமதியும் உடனடியாக வழங்கப்படும் என்று இந்திய மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



# வடக்கு தனியார் பஸ் உரிமையாளர்களின் பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக நிறுத்தம்

**(எஸ்.நிதர்ஷன்)**

வடக்கு மாகாண தனியார் பஸ் உரிமையாளர்களின் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட் டது.

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நேற்று மாலை ஆளுநர் செயலகத்தில் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்த தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினருடனான கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடா ளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தவிசாளர் மற்றும் பொலிஸார் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.


நேற்றைய கலந்துரையாடலில் வழங்கப்பட்ட உறுதி மொழியை அடுத்து பணிப்புறக்கணிப்பைக் கைவிட்டு இன்று முதல் வழமை போன்று பஸ் சேவைகளை முன்னெடுக்கவு ள்ளதாக வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சி.சிவபரன் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்துக்கான தனியார் மற்றும் இ.போ.ச. நெடுந்தூர பஸ் சேவைகள் அனைத்தும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து விரைவில் சேவையை முன்னெடுக்கும் எனவும், ஒரு கிழமை மாத்திரம் தனியார் பஸ் சேவைகள் வழமை போன்று மின்சார நிலைய வீதியில் இருந்து முன்னெடுக்கப்படும் எனவும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நெடுந்தூர பஸ் நிலை யத்தில் இருந்து தாம் சேவைகளை முன்னெடுப்பதாக இருந் தால் இலங்கை போக்குவரத்துச் சபையினரும் இணைந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்து நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தை முற்றிகையிட்டு தனியார் பஸ் உரிமையாளர்கள் போராட்டத்தை முன்னெடுத் திருந்தார்கள்.

இதன்போது போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு வருகை தந்த வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் நேற்று மாலை 6 மணிக்கு ஆளுநர் செயலகத்தில் குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி உரிய தீர்வைப் பொற்றுத் தரு வதாக வாக்குறுதி வழங்கியதையடுத்து முற்றுகைப் போராட்டத்தைக் கைவிட்ட தனியார்பஸ் உரிமையாளர் கள் தொடர்ந்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இந்தநிலையிலேயே நேற்று மாலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## சாந்தனின் பூதவுடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் 32 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த ஈழத் தமிழன் சாந்தனை, 2022.11.11 அன்று உச்சநீதி மன்றம் விடுதலை செய்திருந்தது. அவர் தாயகம் திரும்பும் முயற்சியில் இருந்த வேளை சுகயீனம் காரணமாக வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு அவர் தாயகம் திரும்பவிருந்த நிலையில், காலையில் திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் சென்னை ராஜீவ் காந்தி அரச மருத்துவமனையில் உயிரி ழந்தார்.

அவரின் பூதவுடல், இன்று முற்பகல் 9.45 மணிக்குக் கொழும்பு நோக்கி வரும் விமானத்தில் எடுத்து வரப்படவுள்ளது. நண்பகல் 12 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து அவரின் பூதவுடல் வெளியே எடுத்து வரப்படும்.

கொழும்பில் இருந்து பூதவுடலை உடனடியாக யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இறுதி அஞ்சலி நிகழ்வுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பாரதத்தின் பாராமுகம்

கிடைக்கும் வாய்ப்பை - சந்தர்ப்பத்தை - சரியாகப் பயன்படுத்திக் கொள்வதில்தான் வெற்றியும் சாதனையும் பெரும்பாலும் தங்கி உள்ளன. அத்தகைய சந்தர்ப்பங்கள் கதவைத் தட்டி விட்டு நீண்ட காலத்துக்குக் காத்திருக்க மாட்டா. நாங்கள்தான் உஷாராகி அவற்றைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும்.

வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்களை மமதையோடு அணுகி, உதாசீனமாக நடந்து, அதனால் அவற்றை இழந்து, வரலாற்றுத் தவறை எதிர்கொண்ட சம்பவங்கள் பல உண்டு.

குழப்பமடைந்து வரும் ஈழத் தமிழர்களுடனான உறவைக் கட்டி எழுப்புவதற்குக் கிட்டிய அருமையான வாய்ப்பைத் தனது திமிர்த்தனமான அணுகுமுறையால் கோட்டை விட்டிருக்கும் பாரதம், அதனால் ஈழத் தமிழர்களிடமிருந்து மேலும் அந்நியமாகும் சூழலைத் தேடி வினையாக வாங்கியும் கொண்டிருக்கின்றது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளியாகி 32 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்த சாந்தனின் விடயத்தில் பாரத ராஜதந்திரம் பொறுப்பற்றும் திமிரோடும் வெறுப்போடும் செயற்பட்டு அல்லது செயலின்றி இருந்து, ஈழத் தமிழர்களின் கடும் எரிச்சலுக்கும், சீற்றத்துக்கும், விசனத்துக்கும் உள்ளாகியிருக்கின்றது.

32 ஆண்டுகள் வாழ்க்கையைச் சிறைக்குள் தொலைத்து, இந்திய உச்ச நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டு, தனது வாழ்நாளின் அந்தத்தில் நின்ற சாந்தனின் நிலைமையையும், அவருக்காக ஏங்கிக் காத்திருந்த வயோதிப அபலைத் தாயின் நிலைமையையும் கவனத்தில் எடுத்து, மனிதாபிமான உணர்வோடு இந்திய ராஜதந்திரம் தானாகத் தேடி அரவணைத்துச் செயற்பட்டிருந்தால் ஈழத் தமிழர்களின் மனதில் காத்திரமான இடத்தை பாரதம் மீளவும் சுவீகரித்திருக்க முடியும்.

காந்திய மார்க்கத்தில் - அஹிம்சை நெறியில் - அற வழியில் - ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல், மனித குலமே அதிர்ச்சியுடன் ஆச்சரியப்பட்டு நிற்கத்தக்க விதத்தில் ஓர் உன்னதமான போராட்டத்தை தியாகி திலீபன் முன்னெடுத்த சமயம், யாழ்ப்பாணம் வந்திருந்த அப்போதைய இந்தியத் தூதர் ஜே.என். டிக்ஸிற் தமது வழமையான ஆணவப் போக்கு ராஜதந்திரத்தைச் சற்று மூடை கட்டி ஒதுக்கி வைத்துவிட்டு, உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்து, திலீபனுடன் உரையாடி இருந்தால், இந்திய அமைதிப்படை - புலிகள் இராணுவ மோதல் தவிர்க்கப்பட வாய்ப்புக் கிட்டியிருக்கும் என்பது அவதானிகளின் உறுதியான அபிப்பிராயம். அந்தச் சந்தர்ப்பம் போன்ற ஒரு வாய்ப்பு இப்போதும் இழக்கப்பட்டிருக்கின்றது.

தங்களைக் கைவிட்டு, கொழும்பை அரவணைக்கும் சூக்கும ராஜதந்திரத்தை புதுடில்லி எப்போதோ ஆரம்பித்து விட்டது என்ற எரிச்சலில் - அல்லது யதார்த்தப் புரிந்துணர்வில் - 'இந்தியாவுக்கும் அப்பால்...!' அல்லது 'இந்தியாவையும் தாண்டி..!' என்று புதிய சிந்தனையோட்டத்துக்குள் பயணிக்க வேண்டிய கட்டாயம் ஈழத் தமிழர்களுக்கு ஏற்பட்டு வருகின்றது.

இந்தச் சமயத்தில் ஈழத் தமிழர்களின் மனதை எப்படி வெல்லலாம், அவர்களை அரவணைத்து செயல்படலாம் என்றெல்லாம் சிந்திப்பதை விடுத்து, அப்படி நம்மை தாண்டி ஈழத் தமிழர்கள் சிந்திப்பது எப்படி நியாயமாகும் என்று சீறுவதில்தான் இந்திய ராஜதந்திரம் இப்போதெல்லாம் முறுக்கேறி நிற்கின்றது.

சாகக் கிடந்த சாந்தனை விரைந்து அபலைத்தாயாரிடம் கொண்டு வந்து சேர்க்கும் மனிதாபிமான பணியை இங்குள்ள இந்தியத் துணைத் தூதரகமாவது தானாகத் தேடிப் பொறுப்பேற்று விரைந்து செய்திருந்தால் - வழமையான சிவப்பு நாடா ராஜதந்திர கட்டுப்பாடுகளைப் பேசி அளந்து கொண்டிராமல், அவற்றை ஒதுக்கி வைத்துச் செயல்பட்டிருந்தால் - ஈழத் தமிழ் மக்களின் நன்மதிப்பையும் அபிமானத்தையும் இந்தியா இலகுவாகச் சுவீகரித்துக் கொண்டிருக்க முடியும். இப்போது நிலைமை தலைகீழ். இந்தியக் கொடூரத்தை ஈழத் தமிழ் மக்கள் சீற்றதுடன் நோக்கும் உணர்வுப்போக்கே சாந்தன் விடயத்தை ஒட்டித் தற்சமயம் வெளிப்படுகின்றது.

இத்தகைய நிலைவரங்களைக் கையாளும் இந்தியத் தரப்புகளுக்கு சாந்தனின் விவகாரம் அற்ப - சிறிய - அல்லது தீண்டத்தகாத - விடயமாக இருக்கலாம். ஆனால் ஈழத் தமிழர்களின் மனதில் அது ஏற்படுத்தியுள்ள வடு - ரணம் - சோகம் - ஆத்திரம் - மிக மிக ஆழமானது.

பாரதத்தின் அரசுத் தலைமைக்குக் கள நிலைமைகள் தொடர்பில் வெளிப்படுத்தல்களை வழங்கும் ராஜதந்திரிகளுக்கு இத்தகைய விடயங்களில் ஈழ தமிழர்களின் பக்கத்தில் உள்ள உணர்வு பூர்வ தன்மைகள் புரியாமல் இருக்கலாம்.

தேர்தல் கால அரசியல் சிந்தனையோட்டத்தில் மூழ்கிக் கிடக்கும் பாரதத்தின் அரசியல் - ராஜதந்திர தலைமைகளுக்கு இந்த விடயம் ஒரு பொருட்டாகவேனும் இருக்கப் போவதில்லை.

ஆனால் ஈழத் தமிழர் மனதை இலகுவாக வெல்லை கிடைத்த ஓர் அருமையான சந்தர்ப்பத்தைக் கோட்டை விட்டு, அவர்களின் விரோதிகள் பக்கம் தன்னை நகர்த்தியுள்ளது பாரதம்.

# மக்களவைத் தேர்தல் தி.மு.க. கூட்டணியில் இடதுசாரிகளுக்கு தலா 2 தொகுதிகள் ஒதுக்கீடு


மக்களவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இந்திய கொம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தலா இரண்டு தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மக்களவைத் தேர்தலுக்கான தி.மு.க. கூட்டணியின் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை தீவிரமடைந்துள்ளது. நேற்றைய பேச்சுவார்த்தையில் இந்திய கொம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சிகள் கலந்துகொண்டன.

பேச்சுவார்த்தையின் முடிவில் தி.மு.க. கூட்டணியில் இந்திய கொம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தலா இரண்டு தொகுதிகள் ஒதுக்கீடு செய்து ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

தி.மு.க. தலைவரும் முதல்வருமான ஸ்டாலின் மற்றும் இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் ஆகியோர் தொகுதி பங்கீடுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

# பா.ஜ.கவினர் இந்துக்களுக்கு எதிரானவர்கள் பரப்புரை செய்யுமாறு கனிமொழி அறிவுறுத்தல்

“பா.ஜ.க.மீண்டும்ஆட்சிக்குவந்தால்,இந்தநாடுஎன்னவாகும் என்பதை வீடு வீடாகச் சென்று எடுத்துக் கூறுங்கள். நடக்கவே நடக்காத விடயத்தை நடந்ததாக சமூக ஊடகங்களில் பரப்புவதில் கைத்தேர்ந்தவர்கள் பா.ஜ.கவினர்.”

– இவ்வாறு மகளிரணி ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய தி.மு.கவின் எம்.பி. கனிமொழி கூறியுள்ளார்.

எதிர்வரும் மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, தி.மு.க. மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணி மாநில, மாவட்ட, மாநகர அமைப்பாளர்களுடனான ஆலோசனை கூட்டம் நேற்று ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள முத்தமிழ் பேரவை அரங்கத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டம் கலந்துகொண்டு கனிமொழி கருத்து தெரிவிக்கையில்,

“தேர்தல் பணிகள் எவ்வாறு செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தெளிவாகத் தெரியும். வீடு வீடாக சென்று திண்ணைப் பிரச்சாரம் செய்திட நிச்சயமாக நம்மால் முடிந்த அளவு மற்றவர்களால் செய்ய முடியாது. ஆனால் அதையும் தாண்டி, சின்ன கூட்டங்கள் உங்களுக்குத் தெரிந்த ஐம்பது பேர்களை அழைத்து மகளிர் அணி சார்பில் தெருமுனைக் கூட்டங்களை நடத்துங்கள்.

பா.ஜ.க. கைதேர்ந்த ஒரு திறமை வைத்திருக்கிறார்கள். அதுதான் பொய் பிரச்சாரம். மேலே இருந்து கீழே வரை பிரமாதமாக இதை செய்வார்கள். நடக்கவே நடக்காத விஷயத்தை நடந்ததாக திரும்பத் திரும்ப வாட்ஸ் அப்பில், சோஷியல் மீடியாவில் பரப்பிவிட்டுக் கொண்டே இருப்பார்கள்.நேற்று கூட பிரதமர் பேசும்போது, நம்மை விமர்சனம் செய்து பேசியிருக்கிறார். தூத்துக்குடி துறைமுக விரிவாக்க திட்டத்தை அறிவித்தது 2012- 2013 பட்ஜெட்டில் அப்போதைய நிதியமைச்சர் ப.சிதம்பரம்தான். 23 ஆயிரத்து 400 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. அப்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் நம்மால் அதைத் தொடர முடியவில்லை.



இங்கே இருக்கிற பல பெண்களுக்கு கடவுள் நம்பிக்கை இருக்கலாம். இதுவும் அதுவும் அரசியலாக கலக்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் கோயிலுக்கு போவதோ, சர்ச்சுக்கு போவதோ, மசூதிக்கு போவதோ, கடவுளை நம்புவதோ நம்பாததோ உங்கள் தனிப்பட்ட விஷயம். அதில் வேறு யாரும் குறுக்கிடுவதற்கோ, கருத்து சொல்வதற்கோ அவசியம் இல்லை.

இது மூடநம்பிக்கையா, இது தேவையா, இது பெண்களை முடக்கக் கூடிய நம்பிக்கையா, இது சாதியை வலியுறுத்தும் நம்பிக்கையா என்பது போன்ற விவாதங்கள் இருக்க வேண்டும். ஆனால் அதையெல்லாம் தாண்டி கடவுளையே நான் தான் காப்பாற்றுகிறேன் என்று சொல்லிக் கொண்டு வரக் கூடியவர்களை நம்பக்கூடாது. மற்ற பெண்களுக்கு, இதை எடுத்துச் சொல்ல வேண்டியது நமது கடமை.”– என்றார்.

# மக்களவைத் தேர்தல் கூட்டணி குறித்து பேச்சு 7 பேர் குழுவை அமைத்தது தமிழக பா.ஜ.க.

மக்களவைத் தேர்தல் கூட்டணி தொடர்பாக அரசியல் கட்சிகளுடன் பா.ஜ.க. சார்பில் பேச்சுவார்த்தை நடத்த 7 பேர் கொண்ட குழுவை அமைத்து அக்கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை உத்தரவிட்டுள்ளார்.

2024 மக்களவைத் தேர்தலுக்கான திகதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. தமிழகத்தில் உள்ள பிரதான கட்சிகள் கூட்டணிக் கட்சிகள் உடனான பேச்சுவார்த்தை, தொகுதிப் பங்கீடு உள்ளிட்ட தேர்தல் பணிகளைத் தொடங்கியுள்ளன.

இந்த நிலையில், தமிழக பா.ஜ.கவும் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் மக்களவைத் தேர்தலுக்கான பல்வேறு கட்டப் பணிகளைத் தொடங்கியுள்ளது.

இதற்கமைய, பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் த.மா.கா., இந்திய ஜனநாயக கட்சி, புதிய நீதிக் கட்சி உள்ளிட்ட கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

இந்த நிலையில், கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும், கூட்டணியில் மேலும் கட்சிகளை இணைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக தமிழக


பா.ஜ.க. சார்பில் 7 பேர் கொண்ட குழுவை அமைத்து அக்கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை உத்தரவிட்டுள்ளார்.

# உணவுக்காக காத்திருந்த மக்களை சுட்டுக் கொன்ற இஸ்ரேல் படையினர்

## காசாவில் தொடரும் அவலங்கள்



தெற்கு காசாவில் உணவுக்காக காத்திருந்த பொதுமக்கள் மீது இஸ்ரேலிய வீரர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான காட்சிகள் வெளியாகியுள்ளன. காசாவில் 5 லட்சத்துக்கும் அதிகமானோர் அல்லது நான்கு பேரில் ஒருவர் வறுமையின் ஆபத்தில் இருக்கின்றனர் என உலக உணவுத் திட்டத்தின் துணை நிர்வாக இயக்குநர் எச்சரித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் – காசா இடையே தொடங்கிய போர் சத்தம் இன்று வரை ஓயவில்லை. இரண்டு அதிகார மையங்களுக்கு மத்தியில் பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் தங்களது உயிரை இழந்து வருகின்றனர். உணவு, தண்ணீர் மருத்துவம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கு கூட வழியில்லாமல் தவித்து வருகின்றனர்.

காசா மக்களுக்கு அடிப்படை உணவான மாவும், தண்ணீரும் கிடைக்காமல் திண்டாடி வருகின்றனர். அங்கு உணவு கொடுக்க வந்த லொறியை ஆயிரக்கணக்கானோர் சூழ்ந்து கொண்ட காட்சி பலரது மனங்களையும் உலுக்கியுள்ளது.

தெற்கு காசாவில் உணவுக்காக காத்திருந்த நூற்றுக் கணக்கானோர் மீது இஸ்ரேலிய வீரர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 100 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். மேலும், 500 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் என கூறப்படுகிறது.

பாலஸ்தீன வெளியுறவு அமைச்சகம் இது குறித்து வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

“இந்தத் தாக்குதல் இஸ்ரேலின் தற்போதைய ‘இனப்படு கொலை போரின்’ ஒரு பகுதியாகும். பொதுமக்களை பாதுகாப்பதற்கான ஒரே வழி போர் நிறுத்தம்தான். சர்வதேச சமூகம் அவசரமாக தலையிட்டு இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்” எனத் தெரிவித்துள்ளது.

காசாவில் உள்ள நுசிராத், புரேஜ் மற்றும் கான் யூனிஸ் முகாம்களில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்கள் மற்றும் ஷெல் தாக்குதல்களில் குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கமால் அத்வான் மற்றும் அல்-ஷிஃபா மருத்துவமனைகளில் நீரழிவு நோய் மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டால் வடக்கு காசாவில் ஆறு குழந்தைகள் இறந்துள்ளனர் என்றும் மற்றவர்கள் ஆபத்தான நிலையில் இருகின்றனர் எனவும் காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தெற்கு காசாவில் உள்ள குடிமக்கள் அல்-ரஷித் தெருவில் கூடினர். நோயாளர் காவுவண்டிகள் எதுவும் அந்தப் பகுதிக்கு செல்ல முடியாததால், கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த பாலஸ்தீனர்களின் உடல்கள் அங்குள்ள டிரக்குகளில் கொண்டு செல்லப்படும் காட்சிகள் வெளியாகி இருப்பதாக அல் ஜசீரா ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்த நபர் கூறும்போது,

“நாங்கள் மா வாங்கச் சென்றோம். இஸ்ரேல் இராணுவம் எங்களை நோக்கி சுட்டது. அவர்கள் சுட்டதில் பலர் இறந்து தரையிலே விழுந்து விட்டனர். இந்த தருணத்தை எங்களால் மறக்க முடியாது. முதலுதவி செய்யகூட யாரும் இல்லை” என்றார்.

மேலும் அல் ஜசீரா ஊடகத்தைச் சேர்ந்த நபர் ஒருவர், “இது ஒரு படுகொலை. காசாவில் உள்ள குடிமக்களை பட்டினி அச்சுறுத்துகிறது” என்றார்.

இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் அருகில் இருந்த நான்கு மருத்துவ மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன. ஆனால், அந்த மருத்துவமனைகளை ஒட்டியுள்ள வீதிகள் முற்றிலும் அழிக்கப்பட்டதால் நோயாளர் காவுவண்டிகள் அப்பகுதியை சென்றடைய முடியவில்லை.

பாலஸ்தீனர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், “நான் நேற்று முதல் காத்திருக்கிறேன். இன்று அதிகாலை 4.30 மணியளவில் காசா வழியாக லாரிகள் வரத் தொடங்கின. நாங்கள் உதவியை தேடி அலைந்தபோது, இஸ்ரேலிய டாங்கிகளும் போர் விமானங்களும் எங்களை நோக்கி சுடத் தொடங்கின” என்று பயத்துடன் தெரிவித்துள்ளார்.

# எவ்-35 ஏ போர் விமானங்களை கொள்வனவு செய்யும் சிங்கப்பூர்!



சிங்கப்பூரின் வான்படைக்கு புதிதாக எட்டு எஃவ்-35ஏ ரக போர் விமானங்களை கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளதாக சிங்கப்பூரின் பாதுகாப்பு அமைச்சர் இங் எங் ஹென் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவிப்பினை அவர் நேற்று முன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது வெளியிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மிகுந்த தாங்குதிறனுடன் வடிவமைக்கப்பட்டுள்ள எப்-35ஏ விமானங்கள், செயற்திறன்மிக்க ஆயுதங்களையும் சுமந்துசெல்லும் வல்லமை படைத்தவை. இவை குறுகிய தொலைவில் மேலெழும்பும், செங்குத்தாகத் தரையிறங்கும் ஆற்றல் படைத்தவை,

உலகம் முழுவதும் 900 இற்கும் மேற்பட்ட எப்-35 ரக விமானங்கள் செயற்பாட்டில் உள்ளன.” – என்றார்.

# ஈழத்தமிழர் தீர்வு விவகாரம்போலவே இந்தியா சாந்தனின் விவகாரத்திலும் நழுவல்போக்கே!

## கடுஞ் சீற்றத்துடன் ரவிகரன் குற்றச்சாட்டு




(விஜயரத்தினம் சரவணன்)

இந்தியா ஈழத்தமிழர் தீர்வுவிவகாரத்தில் நழுவல்போக்குடன்செ யற்படுவதைப்போலவே, முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு விடுதலையான சாந்தனின் விவகாரத்திலும் இந்தியா நழுவல் போக்குடன் செயற்பட்டுள்ளதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கை அரசு ஈழத்தமிழர் மீது மேற்கொள்ளும் கொடூர செயற்பாடுகளைப் போலவே இந்தியாவின் இந்தச் செயற்பாட்டைத் தாம் பார்க்கிறார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

இந்தியா ஈழத்தமிழர் விவகாரத்திற்குத் தீர்வினைப் பெற்றுத்தருவதானால், நீண்டகாலங்களுக்கு முன்னரே தீர்வினைப் பெற்றுத் தந்திருக்கலாம்.

ஈழத்தமிழர் தீர்வு விவகாரத்தில் இந்தியா நழுவல்போக்குடனேயே தொடர்ந்தும் செயற்பட்டுவருவதை அவதானிக்க முடிகின்றது.

ஏற்கனவே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்மூலம் கொண்டுவரப்பட்ட மாகாணசபை முறைமைகூட இங்கு முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இது தொடர்பில் இந்தியா, இலங்கை அரசாங்கத்திற்கு உரிய அழுத்தங்களை வழங்காது, தொடர்ந்தும் இலங்கை அரசின் போக்கிற்கு விடுவதையே காணக் கூடியதாகவுள்ளது.

தற்போது இங்கு மாகாணசபை முறைமையே இல்லாமல்போகும் நிலைக்கு வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு ஈழத்தமிழர் தீர்வு விவகாரத்தில் நழுவல்போக்குடன் செயற்படுவதைப் போலவே, சாந்தன் விவகாரத்திலும் இந்தியா நழுவல்போக்குடன் செயற்பட்டுள்ளது. இந்தியாவின் இத்தகைய செயற்பாட்டை ஒருபோதும் எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது.

சாந்தன் இறுதியாக எழுதிய கடிதம், அவருடைய தாயாரின் பாசப்போராட்டம் என்பன எம்மை மிகுந்த சோகத்தில் ஆழ்த்துவன்வாய் அமைந்துள்ளன.

சாந்தன் விடுதலைசெய்யப்பட்ட காலத்திலேயே அவரை இந்தியா இலங்கைக்கு வர அனுமதித்திருக்கலாம்.

அதைவிடுத்து சிறப்பு முகாம் என்ற பெயரில் வதை முகாமில் வைத்து, அவரை வதைத்து மரணமடையச் செய்துள்ளார்கள்.

இலங்கை அரசு ஈழத்தமிழர்கள் மீது மேற்கொள்கின்ற கொடூர செயற்பாடுகள் போலவே, இந்தியாவின் இத்தகைய செயற்பாட்டையும் எம்மால் பார்க்கமுடிகின்றது - என்றார்

# சுமந்திரனின் தாயாரின் பூதவுடலுக்கு அரசியல் பிரமுகர்கள் நேற்றும் அஞ்சலி













# பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற வான் மோதி 4 வயது சிறுவன் உயிரிழப்பு


பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஷ்ணு வித்தியாலய வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 4 வயது சிறுவன் உயிரிழந்துள்ளான்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற வான் மோதியே சிறுவன் உயிரிழந்திருக்கிறான். சிறுவனின் சடலம் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



விபத்துத் தொடர்பில் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டு கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவரை திங்கள் கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பெரிய நீலாவணைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



# நாகானந்த கொடித்துவக்குவின் சட்டத்தரணி அந்தஸ்து இரத்து

சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்குவின் சட்டத்தரணி அந்தஸ்தை இரத்துச் செய்து உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

நீதிபதிகள் சிலர் ஊழல் மிக்கவர்கள் என்பதனால், அவர்களின் முன்னிலையில் வழக்குகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டாம் என நாகானந்த கொடித்துவக்கு 2014 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றத்தில் சத்தியக்கடதாசி சமர்ப்பித்து கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தச் செயற்பாட்டின் ஊடாக 'தவறான நடத்தை' எனப்படும் குற்றம் இழைக்கப்பட்டுள்ளதாக தீர்மானித்து, நீதியரசர்கள் குழாம் நாகானந்த கொடித்துவக்குவின் சட்டத்தரணி அந்தஸ்தை இரத்து செய்யத் தீர்மானித்துள்ளது.

ப்ரியந்த ஜயவர்தன, ப்ரீத்தி பத்மன் சூரசேன மற்றும் எஸ்.துரைராஜா ஆகிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாகானந்த கொடித்துவக்கு சட்டத்தரணி தொழிலில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என உடனடியாக உரிய தரப்பினருக்கு அறிவிக்குமாறு உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பதிவாளருக்கு அறிவுறுத்தியுள்ளனர்.



# மைத்திரிக்கு வழங்கிய இல்லம் உயர்நீதிமன்றம் தடையுத்தரவு!

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவி வகித்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்திய - கொழும்பு பெஜட் வீதியில் அமைந்துள்ள - இல்லத்தை, அவர் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய பின்னரும் பயன்படுத்த ஏதுவாக அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்கி உயர் நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் அதன் நிறைவேற்று பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ப்ரியந்த ஜயவர்தன, காமினி அமரசேகர, குமுதுனி விக்ரமசிங்க ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாமினால் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆம் திகதி, இந்த அமைச்சரவை தீர்மானமானது பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையில் பங்கேற்றிருந்த போதே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அது இயற்கை நியதிகளுக்கு எதிரான செயற்பாடு எனவும் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சிகளுக்கமைய தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக நீதியரசர்கள் குழாம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு முன்னர் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மனு மீதான விசாரணைகள் நிறைவடையும் வரை அமைச்சரவை மேற்கொண்டுள்ள தீர்மானத்தை இடைநிறுத்தி நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்திருந்தது.

# உத்திக பிரேமரத்னவின் இடத்துக்கு எஸ்.சி.முத்துகுமாரண எம்.பியானார்

உத்திக பிரேமரத்ன இராஜினாமா செய்ததை அடுத்து ஏற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்திற்கு எஸ்.சி.முத்துகுமாரண நியமிக்கப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் மாவட்டத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உத்திக பிரேமரத்ன, தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்கிறார் என சபாநாயகருக்கு அண்மையில் கடிதமொன்றினூடாக அறிவித்திருந்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் உத்திக பிரேமரத்னவிற்கு அடுத்ததாக, எஸ்.சி.முத்துகுமாரண அதிகளவு விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார்.





# மொனராகலையில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 36 பேர் படுகாயம்

## அவர்களுள் 24 மாணவர்களும் அடங்குவர்

மொனராகலை – கொடயான பகுதியில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் 36 பேர் காயமடைந்துள்ளனர்.

புத்தமவில் இருந்து மொனராகலை நோக்கிப் பயணித்த பஸ்ஸொன்றே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக சியாம்பலாண்டுவ ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் 24 பாடசாலை மாணவர்களும் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.




# அதிக வெப்ப நிலை ஏப்ரல் வரை நீடிக்கும்

நாட்டில் நிலவும் அதிக வெப்பமான வானிலை எதிர்வரும் ஏப்ரல் நடுப்பகுதி வரை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே முடிந்தவரை வெளிப்புற செயற்பாடுகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு திணைக்களத்தின் பணிப்பாளர் அஜித் விஜேமான்ன தெரிவித்துள்ளார்.

காற்றின் வேகம் குறைவடைந்துள்ளமை மற்றும் வானில் முகில் கூட்டம் குறைவடைந்துள்ளமை என்பன இந்த வெப்பநிலைக்கான காரணமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமென திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, அதிக வெப்பம் நிலவுவதால் இன்றும் பாடசாலை மாணவர்களை வெளிப்புற செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதைத் தவிர்க்குமாறு கல்வி அமைச்சு அனைத்து பாடசாலைகளுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளது.

கடும் வெப்பம் நிலவும் சந்தர்ப்பங்களில் திறந்தவெளியில் பயிற்சிகள் அல்லது விளையாட்டு விழாக்களை நடத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.



# புதிய பொலிஸ்மா அதிபர் ஜனாதிபதியைச் சந்தித்தார்

புதிய பொலிஸ்மா அதிபராக நியமனம் பெற்றிருக்கும் தேசபந்து தென்னகோன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நாட்டின் 36 ஆவது பொலிஸ்மா அதிபராக கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள நிலையிலேயே பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஜனாதிபதியைச் சந்தித்தார்.

புதிய பொலிஸ்மா அதிபருக்கு வாழ்த்துக் கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவருடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

அதனையடுத்து புதிய பொலிஸ்மா அதிபர் சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னமொன்றையும் வழங்கினார்.

இதேவேளை, பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னகோன் நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார். பொலிஸ் தலைமையகத்தில் இதற்கான நிகழ்வு இடம்பெற்றது.

கொழும்பு நாளந்தா கல்லூரியின் பழைய மாணவரான தேசபந்து தென்னகோன், 1998 ஆம் ஆண்டு உதவி பொலிஸ் அத்தியட்சகராக சேவையில் இணைந்தார்.

2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக பதவி உயர்வு பெற்ற அவர், அதே வருடம் டிசம்பர் மாதம் மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டார்.

தேசபந்து தென்னகோன் பொலிஸ் சேவையில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளதுடன் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றியுள்ளார்.

தேசபந்து தென்னகோன் கடந்த வருடம் நவம்பர் மாதம் 29ஆம் திகதி முதல் பதில் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றி வந்தார்.

போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களை தடுப்பதற்காக முன்னெடுக்கப்படும் யுக்திய சுற்றிவளைப்பிற்கு பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தலைமைத்துவம் வழங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மறைந்த ரொனி டி மெலுக்கு ஜனாதிபதி இறுதி அஞ்சலி

சிறந்த அரசியல்வாதியும் தலைசிறந்த பொருளாதார நிபுணருமான மறைந்த முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

அவரின் உடல் வைக்கப்பட்டுள்ள கொள்ளுப்பிட்டி சார்ள்ஸ் டிரைவில் அமைந்துள்ள இல்லத்திற்கு நேற்று முன்தினம் பிற்பகல் சென்ற ஜனாதிபதி, அன்னாரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார். அத்துடன், குடும்ப உறுப்பினர்களுக்குத் தனது அனுதாபங்களையும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, குடும்ப உறுப்பினர்களுடன் சிறிது நேரம் உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு வைக்கப்பட்டிருந்த அனுதாபக் குறிப்பேட்டில் குறிப்பொன்றையும் பதிந்தார்.





# வவுனியா - பாவற்குளத்தின் கீழ் வருகின்ற 200 ஏக்கர் நெற் பயிற்செய்கை பாதிப்பு!

## குளத்தில் நீர் இருந்தும் விநியோகிக்காததால் விவசாயிகள் பரிதாபம்

(கே.வசந்தன்)

வவுனியா, பாவற்குளத்தின் கீழான பகுதியில் செய்கை பண்ணப்படும் 200 ஏக்கர் வரையிலான நெற் செய்கை நீர் விநியோகிக்காததால் பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பாவற்குளத்தின் கீழ் கால போக நெற்செய்கை குளத்து நீர்பாசனத்தை மையமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டது. தற்போது பலர் அதனை அறுவடை செய்து வரும் நிலையில சீரற்ற கால நிலையால் மழை தாக்கம் காரணமாக சில விவசாயிகளின் பயிர்கள் பாதிப் படைந்த நிலையில் மீள விதைத்திருந்தனர். இவ்வாறு மீள மற்றும் தாமதமாக விதைக்கப்பட்ட சுமார் 200 ஏக்கர் நெற் செய்கையில் தற்போது கதிர் நிலைக்கு வரவுள்ள பயிர்களுக்கு நீர் தேவையாக வுள்ளது.

ஆனால், பாவற்குளத்தின் நீரை சிறுபோகத்திற்கு தேவை எனக் கூறி திறக்க மறுப்பதால் தற்போது 200 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்பயிற் செய்கை நிலங்கள் அறுவடைக்கு இரண்டு - மூன்று வாரங்கள் உள்ள நிலையில் பயிர்கள் வெப்பம் காரணமாக பாதிப் படைந்துள்ளன. போதிய கதிர் தாக்கம் இல்லாது பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக, பொருளாதார நெருக்கடிக்குக்கு மத்தியில் பயிற் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் அறுவடை நிலைக்கு வரவுள்ள பயிர்கள் கண் முன்னே அழிவதைக் கண்டு கண்ணீர் விடுவதுடன், இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.



# மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை நேரடியாக பார்வையிட்டார் ஜனாதிபதி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வில்கமுவ பல்லேகம மத்திய மகா வித்தியாலயத்தின் கல்விச் செயற்பாடுகளை நேற்று நேரடியாக மேற்பார்வைச் செய்தார்.

“அஸ்வெசும“ வேலைத் திட்டம் தொடர்பாக வில்கமுவ பிரதேச செயலகத்தின் கேட்போர் கூட்டத்தில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர், பல்லேகம மத்திய மகா வித்தியாலயத்தின் மைதானத்திலிருந்த மாணவர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடி, அவர்களின் கல்விச் செயற்பாடுகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

அங்கிருந்த ஆசிரியர்களுடனும் கலந்துரையாடிய ஜனாதிபதி, மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் மற்றும் பாடசாலையின் வளப் பற்றாக்குறை தொடர்பிலும் ஆராய்ந்தார்.

இதன்போது முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துவார் என மாணவர்களுக்கு உறுதியளித்த ஜனாதிபதி, அவர்களின் எதிர்கால கல்விச் செயற்பாடுகளுக்கும் வாழ்த்துக் கூறினார்.

அதனையடுத்து பாடசாலையின் அருகில் கூடியிருந்த பிரதேச மக்களின் பிரச்சினைகளையும் ஜனாதிபதி கேட்டறிந்தார்.




# மீனவர் பிரச்சினையில் கடற்றொழில் அமைச்சரின் ராஜதந்திரம் தோற்றுபோயுள்ளது என விமரிசனம்

## மீனவ மக்கள் தொழிற்சங்க இணைப்பாளர் அன்னராசா கருத்து

மீனவர்களின் பிரச்சினையில் இலங்கையினதும் கடற்றொழில் அமைச்சரினதும் ராஜதந்திரம் தோற்றுப் போயுள்ளது என அகில இலங்கை மீனவ மக்கள் தொழிற்சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் அ.அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

2016 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 5ஆம் திகதி இலங்கை - இந்திய வெளிவிகார அமைச்சு மட்டத்தில் கடற்றொழில் அமைச்சு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானம் 2016 இல் இருந்து 2024 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மீனவர்கள் பிரச்சினையில் அமைச்சருடையதும் இலங்கையினதும் ராஜதந்திரம் தோற்றுபோயுள்ளது என்பது தான் எங்களுடைய கருத்து.

மீனவர் பிரச்சினையில் முடிவு எடுக்கும் அதிகாரம் தனக்கே உண்டு என்றும், தாமேதான்

கடற்றொழில் அமைச்சர் என்றும் கடற்றொழில் அமைச்சர் தொடர்ந்தும் வலியுறுத்திக் கூறிவருகின்றார்.

ஆனால் கடந்த காலங்களில் பிரதமர் ஒரு கருத்தையும், வெளிவிவகார அமைச்சர் ஒரு கருத்தையும் கூறிவந்துள்ளனர்.

ஆனால் மீனவர் பிரச்சினையில் முடிவெடுக்க வேண்டிய கடற்றொழில்,- அமைச்சரே தற்பொழுது தனது ராஜதந்திரம் தோற்றுப் போனது என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

மீனவர் பிரச்சினையில் இராஜதந்திர ரீதியில் இலங்கைக்குத் தொடர்ந்து (இந்தியா) அழுத்தம் வழங்கினால் தான் தனது பதவியை இராஜினாமா செய்வார் என அவர் தெரிவித்துள்ளார்.

இது எங்களுக்குக் கவலை அளிக்கின்ற விடயம்.

வடக்கு கடற்றொழிலாளர்களின் பிரச்சினையில் வெளிநாட்டுல் படகுகளைக் கையாள்வது தொடர்பிலான 2018 ஆம் ஆண்டுச் சட்டத்தை அமுல்படுத்துவதிலும் ராஜதந்திரம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டம் இலங்கையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமையால் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கடற்றொழில் சமூகம் தொடர்ந்து பாதிக்கப்படுகிறது.

இது ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயம் அல்ல. பொறுப்பு வாய்ந்தவர்கள் அதிகாரத்திலிருந்து கொண்டு ராஜதந்திரம் தோற்றுப் போய் உள்ளது என்று கூறுவது எங்களுக்கு கவலை அளிப்பதாகவும் வேடிக்கையாகவும் இருக்கின்றது. - என அவர் மேலும் தெரிவித்தார்.

# குருந்தூர்மலை ஆர்ப்பாட்ட வழக்கு ஜூலை 25க்கு ஒத்திவைக்கப்பட்டது

**(விஜயரத்தினம் சரவணன்)**

குருந்தூர்மலையில் தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியமை தொடர்பான வழக்கு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு ஜூலைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் கடந்த 2022 ஜூன் மாதம் 12ஆம் திகதியன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தினர் எனத் தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளருமான துரைராசா ரவிகரன் மற்றும் முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர் இ.மயூரன் ஆகியோர் கைது செய்யப்பட்டு பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு, முல்லைத்தீவு நீதிமன்றில நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்ற இந்த வழக்கு விசாரணைகளின்போது, சந்தேகநபர்களான துரைராசா ரவிகரன், இ.மயூரன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இந் நிலையில் வழக்கினை ஆராய்ந்த நீதவான், எதிர்வரும் ஜூலை மாதம் 25ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைத்துள்ளார்.

மேலும் இந்த விவகாரத்தில் சந்தேகநபர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் ஆகியோர் அடுத்த வழக்குத் தவணையில் நீதிமன்றில் முன்னிலையாகவேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது.



### ஐ. நா. சுற்றாடல் பேரவையின் ஆறாவது அமர்வு:

# சதுப்பு நிலங்களை மறுசீரமைக்கும் பணியில் முன்னணி நாடாக இலங்கைக்கு அங்கீகாரம்

ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் பேரவையின் ஆறாவது அமர்வில் சதுப்பு நிலங்களை மறுசீரமைப்பதில் உலகளாவிய ரீதியில் இலங்கை முன்னணி நாடாக அங்கீகரிக்கப்பட்டது.

கென்யாவின் நைரோப் நகரில் அமைந்திருக்கும் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் வேலைத் திட்டத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜயவர்தன கலந்துகொண்டார்.

இதன்போது இலங்கைக்கான விருதை சுற்றாடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்க பெற்றுக் கொண்டார்.

காலநிலை மாற்றம், உயிரியல் பல்வகைத்தன்மை இழப்பு மற்றும் சுற்றாடல் மாசு ஆகிய மூன்று நெருக்கடிகளுக்கும் தீர்வு காண்பதற்கான உலகளாவிய ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் அமைப்பின் ஆறாவது அமர்வு நடைபெற்றது.

அமர்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் முகமாக நிரந்தரப் பிரதிநிதிகளின் திறந்த குழுக் கூட்டம் நடைபெற்றிருந்தது. இதன்போது சதுப்பு நில மறுசீரமைப்பு முயற்சிகளில் இலங்கையை உலகளாவிய முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

எதிர்கால சந்ததிக்காக நிலையான அபிவிருத்தி இலக்குகளை முன்னோக்கி கொண்டுச் செல்வது தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் மாநாட்டின் ஆறாவது அமர்வு, உலகளாவிய சுற்றுச்சூழல் தொடர்பில் முடிவெடுப்பதில் முன்னணியில் உள்ளதோடு மனித குலத்திற்கும் இயற்கைக்கும் இடையே ஒரு புதிய உறவை உருவாக்குவதற்கும் பங்களிக்கிறது.

சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்காக அர்ப்பணிக்கும் ஒரே உலகளாவிய உறுப்பினர் மன்றமாக, ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் பேரவையானது, சுற்றுச்சூழல் தொடர்பிலான கூட்டுப் பொறுப்பை நோக்கமாகக் கொண்ட முக்கியமான முன்முயற்சிகள் மற்றும் புத்தாக்க செயற்பாடுகளுக்கான தனித்துவமான களமாகவும் விளங்குகிறது.

அரச நிறுவனங்கள், சிவில் அமைப்புக்கள், ஆய்வாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் பங்குபற்றுதலுடன் நடைபெறும் இந்த மாநாடு சுற்றாடல் கொள்கை வகுப்பிற்கும் களம் அமைத்துக் கொடுக்கிறது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.







# இன்றைய ராசி பலன்கள் - 01.03.2024




இன்றைய நாள் இனிமையான நாளாக இருக்கும். உங்கள் கடின உழைப்பின் மூலம் இலட்சியங்களை நிறைவேற்றி வெற்றி காண்பீர்கள்.

உங்களின் திறமையான செயல்பாட்டிற்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.உங்கள்கீழ்பணிபுரிபவர்களிடம்நல்லுறவைபராமரிப்பீர்கள்.

இன்று உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும்.குழந்தைகளின் முன்னேற்றம் மற்றும் நலன் குறித்த கவலை காணப்படும். என்றாலும் அனைத்தும் சிறப்பாக நடக்கும்.

இன்று போதிய அளவு பணம் சம்பாதிப்பீர்கள். எதிர்பாராத வகையில் இன்று பண வரவு காணப்படும்.

உங்கள் உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் உடல் நலத்தை காத்துக் கொள்ளலாம்.




இன்று உங்கள் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் கிடைக்கலாம். பயணங்கள் ஏற்படலாம். உங்கள் திறமையான தவகல் தொடர்பு மூலம் நற்பலன்களைப் பெறலாம்.

இன்று பணி மாற்றம் அல்லது இடமாற்றத்திற்கான வாய்ப்பு உள்ளது. இந்த மாற்றத்தால் நன்மை கிடைக்கும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் ஏற்படும் வகையில் உறவை பராமரிக்க முயற்சி எடுப்பீர்கள். உங்களின் அன்பான இயல்பு மூலம் இது சாத்தியம்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இதனால் உங்கள் சௌகரியங்கள் அதிகரிக்கும்.

இன்று உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிபீர்கள்.




உங்கள் பணிகளை முடிப்பதை சற்று கடினமாக உணர்வீர்கள். யதார்த்த அணுகுமுறையை கையாள வேண்டும். செயல்களின் விளைவுகள் சிறப்பாக அமைவதற்கு அமைதியாக யோசித்து செயல்படவும்.

நிலுவையில் உள்ள பணிகளால் தாமதம் ஏற்படும். எனவே திட்டமிட்டு முறையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

நிலையற்ற எண்ணங்கள் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். ஆரோக்கியமான உறவை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் வேண்டும்.

அதிகரிக்கும் செலவுகள் கவலையை அளிக்கும். அதனைச் சுமையாக உணர்வீர்கள்.

சளி மற்றும் தோல் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும்.




இன்று உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். பொறுமையாகவும் உறுதியுடனும் இருக்க வேண்டும். நல்ல விளைவுகளைக் காண திட்டமிடல் வேண்டும். சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம்.

பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரலாம். அதிக வேலைப் பளுவை சாமார்த்தியமாக திட்டமிட்டு ஒழுங்கமைக்கவும்.

குடும்பப் பிரச்சினை காரணமாக மனதில் குழப்பங்கள் ஏற்பட்டுத் துணையுடனான உறவை பாதிக்கும். உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படும்.

இன்று போதிய அளவு பணம் சம்பாதிப்பதை கடினமாக உணர்வீர்கள். வீட்டுப் புனரமைப்புக்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

மன உளைச்சல் காரணமாக கால்கள் மற்றும் தொடைகளில் வலி காணப்படும்.




இன்றைய நாள் சாதகமான நாளாக இருக்கும். அக்கம் பக்கத்தினரின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.பல விஷயங்களை சாதிப்பதற்கு இன்று உகந்த நாள்.

உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டும் ஆதரவும் கிடைக்கப்பெறுவீர்கள். உங்கள் தனித்திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

தொலை தூரத்திலிருந்து பணம் வர வாய்ப்பு உள்ளது. அந்தப் பணம் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் மிகவும் சிறப்பாக இருக்கும். இறைவனின் ஆசிகள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று உங்கள் செயல்களை நிர்வகிக்க நீங்கள் திறமையுடன் யோசிக்க வேண்டும். குடும்பப் பிரச்சினைகளும் அதிகரிக்கும் பொறுப்புகளும் கவலையை அளிக்கும். பாதுகாப்பின்மை உணர்வை தவிர்க்க வேண்டும். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

அதிகரிக்கும் பணிகள் காரணமாக பணியிடத்தில் சவால்கள் நிறைந்திருக்கும். பணிகளில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற்றுவது சிறந்தது.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வை வெளிப்படுத்த முடியாது. இதனால் மகிழ்ச்சியின்மை காணப்படும். மனம் திறந்து பேசிக் கொள்வதன் மூலம் சிறந்த பலன் கிடைக்கும்.

இன்று நிதிநிலைமையில் அனுகூலமான வளர்ச்சி காணப்படாது. இன்று மருத்துவ செலவுகள் ஏற்படலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சரியான செயலுக்கும் தவறான செயலுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைப் பற்றிய படிப்பினையை அளிக்கும். உங்களுடைய இலக்குகளை இன்று சரியாக திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத்தாகத சூழ்நிலைகள் ஏற்படும். நீங்கள் அமைதியாக அந்தச் சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வதை தவிர்க்க வேண்டும். நல்லுறவை தக்க வைத்துக்கொள்ள இருவரும் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

இன்று பண வரவிற்கான வாய்ப்பு இல்லை. பண இழப்புகளைத் தவிர்க்க நீங்கள் கையிலிருக்கும் பணத்தை சேமிக்க வேண்டும். இதன் மூலம் பொருளாதாரப் பாதுகாப்பு கிடைக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. உற்சாகம் குறைந்து காணப்படும். மனதில் குழப்பங்கள் காணப்படும். இன்று எடுக்கும் முடிவுகள் சீரற்றதாக இருக்கும்.

பணியில் வளர்ச்சி குறைந்து காணப்படும். அதிகப் பணிகள் காரணமாக இன்று நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சில சிக்கல்கள் காணப்படும். இதனால் உங்கள் மனநிலை பாதிக்கப்படும்.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. எதிர்கால பாதுகாப்பு கருதி நீங்கள் ஒரு கணிசமான தொகையை சேமிக்க வேண்டும்.

தோல் சம்பந்தமான பிரச்சினைக்கு ஆளாவீர்கள். எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்கவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.03.2024




இன்று புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். பயணங்களுக்கான வாய்ப்பு உள்ளது.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் பணிக்கான பலன் கிடைக்கும். உங்கள் செயல்திறன் காரணமாக கீர்த்தி பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியான உறவை ஏற்படுத்துவீர்கள். உங்கள் இவருடைய எண்ணங்களும் உணர்வுகளும் ஒத்துப் போகும். இன்றைய நாள் சுமுகமாக இருக்கும்.

உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும். குடும்ப நலனுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். ஆரோக்கியத்தில் எந்த விதமான குறைபாடும் இருக்காது.




இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்வது சிறந்தது.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்றுவதில் கவனம் செலுத்துவீர்கள். உங்களின் இந்தப் போக்கின் காரணமாக உங்கள் பணிகளை வெற்றிகரமாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பாக நடந்துகொள்வீர்கள். இதனால் அவர் உங்களை நன்கு புரிந்து கொள்வார்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று சேமிக்கும் ஆற்றல் பெருகும்.

இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




உங்கள் அன்றாடப் பணிகளை ஆற்றும் பொழுது கவனம் தேவை. இன்று ஏமாற்றங்கள் ஏற்படும் என்பதால் அதிகம் எதிர்பார்ப்பு வேண்டாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று அதிகப் பணிகள் காரணமாக உங்கள் பணியில் தடைகள் நிச்சயம் ஏற்படும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வது அவசியம்.

இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரும். அதனால் உங்கள் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய இயலாத நிலை ஏற்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது. கால் வலியால் அவதிப்பட நேரலாம்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைவதில் பல தடைகள் காணப்படும். கவலைகளை ஒதுக்கிவிட்டு அமைதியாக இருங்கள்.

பணியிடத்தில் தடைகள் காரணமாக உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும். இன்று கூடுதல் பணிச் சுமை காணப்படும். இன்று அதிர்ஷ்டத்தை நம்பாமல் கடின உழைப்பை நம்ப வேண்டும்.

உங்கள் துணையிடம் கடுமையாகப் பேசுவீர்கள். அது இன்றைய நாளின் மகிழ்ச்சியை கெடுக்கும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. செலவுகள் அதிகரித்து காணப்படும். அது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

இன்று கால் வலியால் அவதிப்பட நேரலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.








# சாந்தனுக்கு சிறீதரன் புகழ் வணக்கம்

இந்தியாவில் காலமான சாந்தனுக்குப் புகழ் வணக்கம் செலுத்தியிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:–

இதுவரை எழுதித்தீரா ஈழத்தின் தியாக வரலாற்றில் ‘சாந்தன்’ என்னும் இன்னுமொரு உயிர் சருகாகியிருக்கிறது.

தாயகக் கனவைச் சுமந்து, தனது இருபது வயதில் தாய்நிலம் பெயர்ந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜா என்கிற சாந்தன், பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 33 ஆண்டுகள் சிறை மீளப் போராடி, விடுதலையான பின்னரான இறுதி ஒன்றரை ஆண்டுகள் தாய்நிலம் திரும்பப் போராடி, அந்த ஏக்கம் தீராமலேயே உயிரிழந்திருக்கின்ற செய்தி, அத்தனை தமிழர்களையும் உறையவைத்திருக்கிறது.

இருபது வயது இளைஞனாக சிறை சென்ற தன்மகன், என்றோ ஒரு நாள் தாய்மடி சேர்வான் என்ற, சாந்தனின் தாயாரின் 33 வருடக் காத்திருப்பு பொய்த்துப்போய்விட்டது என்பதைத்தான் அத்தனை இலகுவாக எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

தன் இளமைக்காலக் கனவுகளையும், வாழ்வையும் சிறையறைக்குள் குறுக்கிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தின் நீட்சியில், கடந்த 2022.11.11 ஆம் திகதி இந்திய உச்சநீதிமன்றத்தால் விடுதலை



செய்யப்பட்டதன் பின்னரான இந்த ஒன்றரை ஆண்டுகளில், தாய்முகம் காணவும் தாயகம் சேரவும் எடுக்கப்பட்ட அத்தனை முயற்சிகளும் பயனற்றுப் போய், உயிரற்ற உடலமாய் சாந்தன் நாடு திரும்பும் நிலை ஏற்பட்டமை நான் உட்பட, ஓர் இனமாக எம் ஒவ்வொருவரையும் இயலாமையின் விளிம்பில் கூனிக்குறுகி நிற்கவைத்திருக்கிறது.

இந்த இறுதிநாள்களில் எது நிகழக்கூடாது என நினைத்தோமோ அந்தக் கொடுந்துயர் நிகழ்ந்திருக்கிறது. தன் ஆயுளின் அரைவாழ்நாளை மகனுக்கான காத்திருப்பிலேயே கழித்த ஒரு தாயின் கனவு கானல்நீராகக் கலைத்துப் போடப்பட்டிருக்கிறது. அந்தத்தாயின் கண்ணீரின் கனதி, இது இரங்கலோடு கடந்துசெல்லும் இறப்புச் சம்பவமல்ல என்பதை வரலாறு தோறும் எங்களுக்கு இடித்துரைத்த வண்ணமே இருக்கும்.

ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக, எனது தனிப்பட்ட மற்றும் பதவிநிலை இயலுமைகளின் எல்லா எல்லைகளைக் கடந்தும் சாந்தனின் விடுதலைக்கான சில முயற்சிகளை, பல அழுத்தங்களை நானும் முன்னெடுத்திருந்தேன். பலதரப்பு அழுத்தங்கள், கோரிக்கைகள் எல்லாவற்றினதும் கூட்டிணைந்த வடிவமாக இருநாட்டு சட்ட நடைமுறைகளின் நெடுநாளைய இழுபறி நிலைக்குப் பின்னர், நாடு திரும்புவதற்கான அனுமதி வழங்கப்பட்டு, பயண ஒழுங்குகளும் திட்டமிடப்பட்டு எல்லோரது வேண்டுதல்களும் கைகூடவிருந்த கடைசித் தருணத்தில் சாந்தனின் இறப்பு நேர்ந்திருக்கிறது.

எந்தச் சமரசங்களுக்கும் உட்படுத்தமுடியாதவகையில், ஈழத்தமிழினத்தின் ஏதிலித்தனமும், அதிகாரமற்ற கையறுநிலையும், சாமான்யர்களின் உணர்வுகளை உணரத்தலைப்படாத அரசபீடங்களின் அசமந்தப்போக்கும், விடுதலை வேண்டிய எங்கள் இனத்தின் விடுதலைப் போராளியை காந்திய தேசத்தில் காவு வாங்கியிருக்கிறது.

இந்தக் கொடுந்துயரின் வலி சாந்தனின் குடும்பத்துக்கு வாழ்நாள் வலி என்றபோதும், இழப்பின் ரணங்களைச் சுமந்தவர்களாகவேனும் சாந்தனின் தாயார், தம்பி மதிசுதா உள்ளிட்ட சகோதரர்கள், உறவுகள் அனைவரும் இந்தக் கொடும் வலியின் வாதையிலிருந்து மெல்ல மெல்ல மீள, வல்ல இயற்கை வழிசெய்யட்டும்.

கனத்த இதயத்தோடு மாவீரன் சாந்தனுக்கு எம் புகழ் வணக்கம். – என்று உள்ளது.




# மண்முனை மேற்கு கல்வி வலய மென்பந்துக் கிரிக்கெட்: சம்பியனானது கன்னன்குடா மகா வித்தியாலய அணி!

(பழுவூரான்)

மண்முனை மேற்கு கல்வி வலயத்தில் உள்ள மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கன்னன்குடா மகா வித்தியாலய அணி சம்பியனானது.

10 ஓவர்கள் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி, கன்னன்குடா மகா வித்தியாலய மைதானத்தில், அப்பாடசாலை அதிபர் ரி.கரிகாலன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (25) இடம்பெற்றது.

மட்டக்களப்பு கோட்டமுனை விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையில் மண்முனை மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் கிரிக்கெட் திறனை பரீட்சிப்பதற்கான களமாக இப் போட்டித் தொடர் நடத்தப்பட்டது.

இதில், மண்முனை மேற்கு கல்வி வலயத்தில் உள்ள ஏழு பாடசாலைகள் கலந்துகொண்டிருந்தன.

15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கிடையிலான இச்சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி கன்னன்குடா மகா வித்தியாலயத்திற்கும், கரையாக்கன் தீவு விநாயர் பாடசாலைக்கும் இடையில் இடம்பெற்றது.

இதில், கன்னன்குடா பாடசாலை முதலில் துடுப்பெடுத்தாடி, 10 ஓவர்களில் 06 விக்கட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கரையக்கன் தீவு விநாயகர் பாடசாலை, 6 விக்கட்டுக்களை இழந்து 10 ஓவர்கள் முடிவில் 94 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது.

இதன் அடிப்படையில் 30 ஓட்டங்களால் கன்னன்குடா மகா வித்தியாலயம் வெற்றிபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

அத்துடன், உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் எஸ்.சந்திரகுமார், கோட்டமுனை விளையாட்டுக்கழகத் தலைவர் பி.சடாட்சரராஜா மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர், கோட்டைமுனை விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





